அன்பிற்கினிய தோழர்களே,

உரலே இறக்கை கட்டி பறந்த சூறாவளியில்
சிறுக சிறுக ஆயிரக்கணக்கான வாக்குகளை
சேகரித்த நம் சிட்டுக்குருவிகளின் சிறப்பான
பணியை நெஞ்சார வாழ்த்தி போற்றுகிறேன்

வாய்ப்பு நமக்கு இல்லை என அறிந்தும்
வாக்களித்த பெருமக்கள் நமக்கு ஆதரவு
தந்தவர்கள் மட்டுமல்ல பேரவையின்
வளர்ச்சியிலே இணைத்துக்கொண்ட விழுதுகளே
என அறிந்து பேறுவகை கொள்கின்றேன்.
தொய்வின்றி உழைத்திட்டால் நாம் தேடும்
விடுதலையும் வெகுதொலைவில் இல்லை
என உறுதிபட கூறுகின்றேன்.

ஒரு சில தொகுதிகளில் சேகரித்த சொற்ப வாக்குகள்
"நாமும் கச்சேரிக்கு போனோமோ" என்ற அளவிலே
அங்கெல்லாம் இருந்து விட்டோமா என்ற எண்ணம்
வருவதை தவிர்க்கவும் முடியவில்லை
காரணம் எதுவாயினும் காலத்தே களைவதே
நம் வளர்ச்சிக்கு வழி.

ஏழை வீழ்த்திக் களிப்புற்றிருக்கையிலே
மாண்புமிகு எட்டு என இடி செய்தி வருகிறது
அதில் பண்ணைக்கொரு மாண்புமிகு
தன் சொந்தங்கள் வளம் கொழிக்க
ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தை
விரிவுபடுத்தி நம் சொந்தங்களை சுரண்ட
பண்ணையிலே முடக்க முயற்சிக்க கூடும்
அனைவரும் அறியும் வண்ணம்
நம் தரப்பு காரணத்தை எடுத்துரைத்து
முறியடிப்பாய் முழுமூச்சாய்

சிந்தாமல் சிதறாமல் வாக்களித்த நம்மவரை
அவைத் தலைவர் பின்னாலே அமரவைக்க கூடும் என
யூகம் தான் வருகிறது அதுவும் உறுதிபடவில்லை.
என் செய்ய தோழர் என புலம்புவது இங்கு என் நோக்கமல்ல
அதில் பொருளுமில்லை பயனுமில்லை
நமக்காக உழைத்திட்டால் உயர்ந்திடுவோம் நாமாக
என மீண்டும் நினைவூட்ட வரைந்திட்டேன் இம்மடலை.

-செல்வா